# பாவலரேறு பெருஞ்சித்திரனார்



இயற்பெயர் : இராசமாணிக்கம் ( துரை-மாணிக்கம் )

பெற்றோர் : துரைசாமியார், குஞ்சம்மாள்

ஊர் : சேலம் மாவட்டம், சமுத்திரம்

காலம் : 10-03-1933 - 11.06.1995

சிறப்பு : பாவலரேறு , பெருஞ்சித்திரனார்

பணி : எழுத்தாளர், இதழாசிரியர்

நூல்கள் : உலகியல் நூறு, எண் சுவை எண்பது, ஐயை (பாவியம்), ஓ! ஓ! தமிழர்களே, கனிச்சாறு, கொய்யாக் கனி, நூறாசிரியம், பள்ளிப் பறவைகள், பாச்சோறு, பாவலரேறு பெருஞ்சித்திரனார் பாடல்கள்.

# தமிழ்க்கும்மி

கொட்டுங்கடி கும்மி கொட்டுங்கடி, இளங்
கோதையரே கும்மி கொட்டுங்கடி – நிலம்
எட்டுத் திசையிலும் செந்தமிழின் புகழ்
எட்டிடவே கும்மி கொட்டுங்கடி!

ஊழி பலநூறு கண்டதுவாம், அறிவு
ஊற்றெனும் நூல்பல கொண்டதுவாம் – பெரும்
ஆழிப் பெருக்கிற்கும் காலத்திற்கும் முற்றும்
அழியாமலே நிலை நின்றதுவாம்!

பொய் அகற்றும்:  உள்ளப் பூட்டறுக்கும் – அன்பு
பூண்டவரின் இன்பப் பாட்டிருக்கும் – உயிர்
மெய்புகட்டும்; அறமேன்மை கிட்டும்; இந்த
மேதினி வாழ்வழி காட்டிருக்கும் !